// தனிகவனம் //

// உள்ளாட்சி தேர்தல் மிக அவசரம் //

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 2734 / அ1 / 2021 நாள் -09-2021

பொருள் : பள்ளிக் கல்வி - வேலூர் மாவட்டம் - உள்ளாட்சித் தேர்தல் 2021 - தேர்தல் வாக்குச்சாவடிகளில் பணியாற்ற ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாதோர் பணியாளர்களுக்கு தேர்தல் பயிற்சி வகுப்பு ஆணை கிடைக்கப்படாதவர்களின் விவரங்களை வேலூர் முதன்மைக் கல்வி அலுவலக இணையதளத்தில் உள்ளீடு செய்ய கோருதல் சார்பு.

பார்வை : வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நேரடி ஆணை நாள் 23-09-2021

•••••

பார்வையில் காணும் வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நேரடி ஆணைக்கிணங்க நடைபெறவுள்ள உள்ளாட்சித் தேர்தல் 2021 தொடர்பாக வாக்குச்சாவடி மையங்களில் பணிபுரிய ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களளாதோர் பணியாளர்களுக்கு தேர்தல் பயிற்சி ஆணை வழங்கப்பட்டது.

இதுநாள் வரை தேர்தல் பயிற்சி ஆணை கிடைக்கப்படாதவர்களின் விவரங்கள் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக இணையதளத்தில் http://edwizevellore.com/ 23-09-2021 பிற்பகல் 04.00 மணிக்குள் உள்ளீடு செய்யுமாறும் அனைத்து வகை உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வட்டாரக் கல்வி அலுவலர்கள் தங்கள் ஆளுகையின்கீழ் உள்ள ஆசிரியர்களுக்கு பயிற்சி ஆணை கிடைப்பப்டவில்லை என்றால் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தினை பூர்த்தி செய்து இன்று மாலை 04.00 மணிக்குள் வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலக ஈமெயில் velloreceo@gmail.com முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்,

இப்பொருள் மீது தனி கவனம் செலுத்தி செயல்படுமாறு அனைத்து தலைமை ஆசியர்கள் மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

இணைப்பு
படிவம்

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

23/9/21

பெறுநர்
அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள்
அனைத்து அரசு உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் / மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்
நகல் மாவட்டக் கல்வி அலுவலர் வேலூர் அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.